செய்தி வெளியீடு எண்.794 நாள். **7.12.2007**

# நெடுஞ்சாலைத் துறையில் 7 ஆண்டுகளுக்குப் பிறகு பணி நியமனம்

## 211 உதவிப் பொறியாளர்கள், 77 தினக்கூலி பணியாளர்கள், 35 கருணைஅடிப்படையிலான பணியாளர்களின் புதிய நியமனங்களுக்கு பணி ஆணைகள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத்துறையில், 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் பெருமளவில் சாலைப் பணிகளும் பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்பார்வையிடுவதில் உதவிப் பொறியாளர்கள் பெரிதும் துணை புரிகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு முந்தைய ஆட்சியில் புதிய நியமனங்களுக்கு அரசு தடை விதித்ததால் நெடுஞ்சாலைத்துறையில் உதவிப் பொறியாளர்கள் யாரும் புதிதாக நியமிக்கப்படவில்லை.

தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, அரசுப் பணிகளில் உள்ள காலியிடங்களை உடனடியாக நிரப்பிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிய அறிவுரைகளைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் துறையில் காலிப் பணியிடங்களாக இருந்த 215 உதவிப் பொறியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பயனாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 215 உதவிப் பொறியாளர்களில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று வழங்கினார்.

உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமன ஆணைகள் பெற்றவர்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 38 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 43 பேரும், பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 64 பேரும், பொதுப் பிரிவில் 66 பேரும் அடங்குவர். இவர்களில் 63 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இவர்கள் தவிர, தற்போது துறையில் பணியாற்றிவரும் 81 இளநிலைப் பொறியாளர்கள் பதவி உயர்வுகளின் மூலம் உதவிப் பொறியாளர்களாகத் தொடர்ந்து நியமிக்கப்பட உள்ளனர்.**

**மேலும், நெடுஞ்சாலைத்துறையில் ஏற்கனவே 300 சாலைப் பணியாளர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது 35 பதிவுரு எழுத்தர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்குரிய நியமன ஆணைகளையும்,**

**நெடுஞ்சாலைத்துறையில் பல்வேறு நிலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்தவர்களின் நீண்டநாள் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்பச் சாலைப் பணியாளர்களாக 51 பேருக்கும், சாலை ஆய்வாளர்களாக 2 பேருக்கும், ஓட்டுநர்களாக 3 பேருக்கும், உதவி வரைவாளர்களாக 21 பேருக்கும் சேர்த்து மொத்தம் 77 பணியாளர்களுக்கு உரிய நியமனங்கள் வழங்கிட அனுமதி அளித்து, அவர்களுக்குரிய பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் கலைஞர் இன்று வழங்கினார்.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று பணி நியமன ஆணைகள் வழங்கியுள்ள 323 பேருக்குரிய காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுவதால், அரசுக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 3 கோடியே 75 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும்.**

**இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோயில் சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு. கே.அலாவுதீன் ஆகியோர் உடனிருந்தனர்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.